சென்னை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின்
செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: திரு.கா.ஜெகதீசன்,எம்.இ.,

சுருக்கம்

பணிக்குழு – தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு 2018 -2019 மற்றும் 2019 -2020 வரையிலான காலத்திற்கு தெரிவு செய்யப்பட்டு – இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டது – தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்தமை – பணி வரன்முறை செய்து – ஆணை வழங்கப்படுகிறது.

---

ஒ1 /12283/2020

நாள்.26.08.2021

படிக்கப்பட்டது:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண். 2387/PSD-I/2020, நாள். 28.05.2020.
2. சென்னை,தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயலாணைகள் எண். ஜி3/16386/2020-2, நாள். 29.07.2020.
3. சென்னை–32, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் செயலாணைகள் எண். ஒ1/12283/2020, நாள். 04.08.2020.

*****

**ஆணை–**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தின்படி தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, மேலே 2வதாக படிக்கப்பட்ட செயல்முறை ஆணை மூலம் இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு மேலே 3வதாக படிக்கப்பட்ட செயல்முறை ஆணை மூலம் இவ்வலுவலகத்தில் பணியமர்த்தப்பட்ட கீழ்க்கண்ட இளநிலை உதவியாளர்களின் பணிவரன்முறையானது " The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Combined Civil Service Examination - IV Services for the year 2018 – 2019 and 2019 – 2020 recruitment". இவர்களது தெரிவு உறுதி செய்யப்பட்டது என தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ளதால், மேற்கண்ட நிபந்தனைக்குட்பட்டு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் அவர்கள் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எண். | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திருமதி. பா. சரண்யா , இளநிலை உதவியாளர் | 17.08.2020 முற்பகல் | 17.08.2020 முற்பகல் |
| 2. | திருமதி. அ. கௌதமி, இளநிலை உதவியாளர் | 21.08.2020 முற்பகல் | 21.08.2020 முற்பகல் |

20/06/2023
இயக்குநர் (மு.கூ.பொ)
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
சென்னை. 32.

மேற்கண்ட பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன் பிரிவு 28 (1)ன் படியும், தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் சிறப்பு விதிகளின் கீழான விதி 32–ன் படியும் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தொடர்ச்சியான மூன்று ஆண்டுகள் பணிக் காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

மேற்படி தனியர்கள் தகுதிகாண் பருவ காலத்தில் அரசாணை எண். 130 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள். 22.07.2008ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அவர்கள் பணி நியமனம் பெற்ற நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குள், தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி தேர்வில் தேர்ச்சி பெற்றால் மட்டுமே தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்ய இயலும் என்பதால் அவர்கள் அத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் உத்திரவிடப்படுகிறது.

(ஒ.ம்)/–கா.ஜெகதீசன்
இயக்குநர்(மு.கூ.பொ),
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
சென்னை–32.

பெறுநர்
சம்பந்தப்பட்ட பணியாளர்கள்,
இவ்வலுவலகம்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

க. ராஜமொழி
கண்காணிப்பாளர், 27/08/2021
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகம்,
சென்னை-32.

27/8/21